# மேல் மாகாண சபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மேல் மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மேல் மாகாண சபையின் செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்

#### (அ) மாகாண சபை நிதியக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபையின் நிதியக் கணக்குகள் 2012 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

#### (ஆ) ஏனைய கணக்குகள்

2012 மார்ச் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் தொடர்பான முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2011 ஆம் ஆண்டிற்கானது | | | |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 26 | - | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 30 | 30 | - | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 46 | 46 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - | - |
| (v) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 05 | 05 | - | - |
| (vi) | நிதியக் கணக்குகள் | 06 | 06 | - | - |
| (vii) | நியதிச்சட்ட கணக்குகள் | 08 | 04 | 04 | 02 |

### 1.2.1 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை சபைக்கு முன்வைத்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய வருடங்களில் மேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காயவாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபைக்கு முன்வைப்பட்ட நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி | சபையில் முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2008 | 2009.12.10 | 2010.02.09 |
| 2009 | 2010.10.26 | சபையில் முன்வைக்கப்படவில்லை |
| 2010 | 2012.01.16 | 2012.05.22 |

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 நிதிஏற்பாட்டு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 06 தலைப்புக்களில் 13 செலவின விடயங்களின் கீழ் ரூபா 1,041,076 தொகையான தேறிய ஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 13 தலைப்புக்களில் 116 செலவின விடயங்களின் கீழ் ரூபா 65,315,845 தொகை நிதிஏற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தன.

(இ) 05 தலைப்புக்களின் செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டினைக் கழித்ததன் பின்னர் செலவின விடயங்களுக்கு மீண்டும் நிதிஏற்பாடு அதிகரிக்கப்பட்ட 14 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### 1.3.2 கட்டுநிதிக் கணக்கு

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சுகாதாரத் திணைக்களத்தினால் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 207,844,706 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டிற்காக ரூபா 117,232,054 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 90,612,652 தொகையும் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.3 தீர்க்கப்படாத பொது வைப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணத் திறைசேரியின் பொது வைப்புக் கணக்கில் ரூபா 685,740,786 செலவு மீதி காணப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 02 வருடங்களை விஞ்சிய 06 நிறுவனங்களின் வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,617,464 ஆக இருந்தன.

### 1.3.4 மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்

15 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகையான ரூபா 114,466,074 மீதியும், மரணித்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகையான ரூபா 10,585,257 மீதியும், சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலை தடைசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 11,641,564 மீதியும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களின் ரூபா 69,742 மீதியும் ஆக ரூபா 136,762,637 தொகை நீண்ட காலமாக அறவிடப்படாத மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 கணக்கு இணங்காமை

அந்தந்த திணைக்களங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் மாகாண சபை நிதியக் கணக்குகள் (மாகாண திறைசேரி ஏடு) என்பவற்றுக்கிடையே ரூபா 802,469,812 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| கணக்கு விபரம் | அந்தந்த திணைக்களக் கணக்குகளின் பிரகாரம் மீதி | மாகாண சபை நிதியக் கணக்குகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 27 கட்டு நிதிக் கணக்குகள் | 32,639,501 | 782,621,409 | 749,981,908 |
| 05 பொதுவைப்புக் கணக்குகள் | 8,577,358 | 11,585,610 | 3,008,252 |
| மாகாண சபை உத்தியோகத்தர்களின் 10 முற்பணக் கணக்குகள் | 289,819,694 | 295,396,327 | 5,576,633 |
| 04 ஏனைய முற்பணக் கணக்குகள் | 213,334,590 | 196,693,104 | 16,641,486 |
| 12 செலுத்தவேண்டிய கணக்குகள் | 4,155,638 | 28,389,772 | 24,234,134 |
| 07 வருமானக் கணக்குகள் | 371,323,994 | 374,351,393 | 3,027,399 |
| | | | 802,469,812 |

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

**பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2012 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2011 ஆம் ஆண்டிற்குரிய 21 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளுக்குரிய 08 கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1991 இன் 05 ஆம் இலக்க மேல் மாகாண திருத்தப்பட்ட நிதிக் கொள்கைத் திருத்தத்தின் 1990 இன் 06 ஆம் இலக்க மாகாண நிதிக் கொள்கையின் 102(அ) பிரிவு | மாகாண வருமானத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் / ஊழியர்களுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு நிதியமொன்று உருவாக்கப்படாமல் செலவினத் தலைப்பின் ஏற்பாடுகளிலிருந்து ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 1646 | மாகாண சபையின் 03 நிறுவனங்களுக்குரிய 11 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்கு உரித்தான ஆகக் கூடிய இடர்கடன் எல்லை ரூபா 250,000 இனை விஞ்சி இடர்கடன் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஈ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையில் சேவையாற்றுகின்ற வாகன உரித்தைப் பெறாத உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (உ) | மேல்மாகாண நிதி விதி 455.2 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தில் ரூபா 1,442,872 பெறுமதியான கொள்வனவு செய்யப்பட்ட 16 விடயங்கள் களஞ்சியப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 3,918,439,938 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,080,890,676 ஆக இருந்தது.

## 2.2 வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான முரண்களுடனான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

**வருமானம்**

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 19,952,560,000 | 21,669,946,772 | (1,717,386,772) | 21,104,800,000 | 19,488,605,804 | 1,616,194,196 |
| வரிஅல்லாத வருமானம் | 1,855,488,000 | 2,847,472,906 | (991,984,906) | 2,364,326,000 | 3,252,368,241 | (888,042,241) |
| அரசாங்க மானியம் | 12,477,202,000 | 11,019,116,367 | 1,458,085,633 | 6,304,007,000 | 6,100,000,000 | 204,007,000 |
| மொத்தம் | 34,285,250,000 | 35,536,536,045 | (1,251,286,045) | 29,773,133,000 | 28,840,974,045 | 932,158,955 |

## செலவினம்

| செலவினம் | 2011 பாதீடு செய்யப்பட்டவை | 2011 உள்ளபடியானது | 2011 முரண் | 2010 பாதீடு செய்யப்பட்டவை | 2010 உள்ளபடியானது | 2010 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளுக்குரிய வேதனம் | 19,817,031,248 | 19,100,569,969 | 716,461,279 | 17,456,239,180 | 17,300,622,747 | 155,616,433 |
| ஏனையவை | 11,351,634,419 | 9,515,671,923 | 1,835,962,496 | 11,265,370,913 | 10,374,668,390 | 890,702,523 |
| மீண்டெழும் | 31,168,665,667 | 28,616,241,892 | 2,552,423,775 | 28,721,610,093 | 27,675,291,137 | 1,046,318,956 |
| மூலதன | 3,577,020,333 | 3,001,854,215 | 575,166,118 | 4,391,106,907 | 3,120,036,986 | 1,271,069,921 |
| மொத்தம் | **34,745,686,000** | **31,618,096,107** | **3,127,589,893** | **33,112,717,000** | **30,795,328,123** | **2,317,388,877** |

மீளாய்வாண்டின் மீண்டுவருஞ் செலவினத்தினதும் மூலதனச் செலவினதும் விகிதாசாரம் 10:1 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் இறுதியிலுள்ள நிலுவை வருமானம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 1,426,690,111 | 1,897,917,733 | 1,272,584,733 |
| வரியல்லா வருமானம் | 1,248,958,145 | 1,086,708,932 | 857,656,300 |
| | 2,675,648,256 | 2,984,626,665 | 2,130,241,033 |

## 2.4 நிதிக் கட்டுப்பாடு

வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்படுதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 நிறுவனங்களின் 06 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரித்தலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 04 நிறுவனங்களின் 09 வங்கி நடைமுறைக் கணக்குகளில் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 154,954 கூட்டுத்தொகையான 53 காசோலைகள் தொடர்பாக நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 01 நிறுவனத்தின் 03 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவு ரூபா 23,970 ஆக இருந்ததுடன் செலவு ரூபா 44,424 ஆக இருந்தது.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாணத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் சம்பந்தமான தகவல்கள் பின்வருமாறு.

**(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்**

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 2,170 | 2,053 | 117 |
| மூன்றாம் தரம் | 829 | 656 | 173 |
| இரண்டாம் தரம் | 8,580 | 7,669 | 911 |
| ஆரம்ப தரம் | 4,770 | 4,552 | 218 |
| மொத்தம் | 16,349 | 14,930 | 1,419 |

**(ஆ) பாடசாலைப் பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் மற்றும் | 34,736 | 32,882 | 1,854 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆசிரியர்கள் | | | | |
| சிற்றூழியர்கள் | 2,998 | 3,059 | - | 61 |
| உதவியாளர்கள் | | | | - |
| | 961 | 29 | 932 | ------ |
| | -------- | ------- | ------- | -- |
| | 38,695 | - | 2,786 | 61 |
| | | 35,970 | | ==== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மாகாண சபையின் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயர் முகாமைத்துவ பதவிகளை உள்ளடக்கிய பல்வேறு பதவிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் ஆளுநர் அவர்களின் / மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் உயர் தரங்களிலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு பதில் கடமை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ii) கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் கணக்காளர் பதவி இல்லாதிருந்த போதிலும் கடமைகளைக் கவனிப்பதற்கு / பதில் கடமைக்காக 2002 ஆம் ஆண்டு தொடக்கம் ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்காக மாதமொன்றிற்கு ரூபா 3,500 படி ரூபா 126,000 கூட்டுத்தொகையான படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) மத்திய அரசாங்கத்தின் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தில் கடற்றொழில் பரீட்சகர் ஒருவர் 2005 ஒக்தோபர் தொடக்கம் தற்காலிக அடிப்படையில் மாகாண வீதி அபிவிருத்தி, மிருக உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், கடற்றொழில் மற்றும் சுற்றுலா அமைச்சுக்கு நியமிக்கப்பட்டு

மாதமொன்றிற்கு ரூபா 2,000 தொகையான பிரயாணச் செலவினக் கொடுப்பனவு மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தன.

**2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.6.1 கிடைக்கவேண்டிய கணக்குகள்**

பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்ட வீதி அனுமதிப்பத்திர வருமானமான ரூபா 31,878,082 தொகை மாகாணசபை நிதியத்தில் செலவு வைப்பதற்காக 2012 மே மாதம் வரையிலும் உரிய மாகாண அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**2.7 வாகனப் பயன்பாடு**

களுத்துறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குரிய டபள் கப் வாகனம் ரூபா 877,700 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் பழுதுபார்க்கும் செயற்பாடுகளுக்காக 2011 மார்ச் மாதத்தில் இரத்மலான இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி தேர்தலில் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு நியமிக்கப்பட்ட பொதுமக்கள் பிரதிநிதிகளை அறிமுகப்படுத்தும் மாநாடு 2011 ஏப்ரல் 21 ஆந் திகதி நடாத்தப்பட்டு 564 பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கான உபசரிப்புச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,297,200 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதில் 195 பொதுமக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றாமையினால் ஒருவருக்கு ரூபா 2,300 படி ரூபா 448,500 தொகை சிக்கனமற்றதாக இருந்தது.

(ஆ) பராவ என்ற பெயருடைய ஜைவ-விவிதத்வ எழுச்சி செயற்திட்டத்திற்காக கொழும்பு மாவட்டத்தில் 03 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய அரசாங்கத்தின் 450 ஏக்கர் காணியை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆகஸ்ட் வரை பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 9,164,303 தொகை

செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய காணிகளின் விடுவிப்புக்களை நிராகரித்து உரித்தினை மீளப்பெறுவதற்கு காணி ஆணையாளரினால் 2011 பெப்ரவரி மாதத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திலிருந்து வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துதல், பிரதேசவாசிகளின் ஜீவனோபாய நிலைமையை உயர்த்துதல், சுற்றாடலை உயிர்வாழ்வதற்கு உகந்ததாக உறுதிப்படுத்துதல், பாரம்பரிய மற்றும் கலாசார உரிமையைப் பாதுகாத்தல், சேதனப் பசளைகளைப் பயன்படுத்தும் பயிர்ச் செய்கைகளை முன்னேற்றுதல் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருதல் போன்ற விடயங்களை நோக்கங்களாகக் கொண்டிருந்த போதிலும் அச்செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

மாகாண சபையின் ஆரம்பம் தொடக்கம் வருடாந்த நிதி அறிக்கைகளின் மூலம் பிரதம அமைச்சருக்கு கையளிக்கப்பட்ட நிதி மற்றும் திட்டமிடல் சட்டங்கள் மற்றும் சமாதானம், மாகாண நிருவாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்கள் ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்துடன் 2009 மே மாதத்தின் போது பிரதம செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதன் போது பிரதம அமைச்சுச் செயலாளரின் விடயப்பரப்பிற்குரிய அமைச்சரவைக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அமைச்சரவைப் பிரசுரங்களை விநியோகித்தல் என்பன பிரதம செயலாளருக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் பிரதம செயலாளர், மாகாணத் திறைசேரியின் செயலாளராக மாகாண அரச கணக்குக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவை கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு கையொப்பமிடுதல் என்பன சர்ச்சைக்குரிய தன்மையில் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேல் மாகாணத்தில் எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்தும் மோட்டார் வாகனத்தின் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய வகையில் வருடாந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் கணனி வலையமைப்பைச் செய்யும் செயற்பாடுகள் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 யூலை இறுதி வரையிலும்

மாளிகாவத்தை பிரதான அலுவலகம், நாரஹேன்பிட்ட மோட்டர் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகம் மற்றும் 3 பிரதேச செயலகங்களில் மாத்திரம் இச்செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இரண்டு தினங்களில் விநியோகிக்கப்பட்ட வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 177 வாகனங்களுக்காக கிடைக்கப்பெற்ற புகைப்பரிசோதனை சான்றிதழ்களில் 84 வாகனங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் போலியானதாக இருந்தன.

(இ) கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் II "ஆ" பதவிக்கு 1994 செப்தெம்பர் மாதத்தின் போது சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆகக் குறைந்த தகமைகளைப் பூர்த்தி செய்யாமையினால் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்வதற்காக 2000 ஆகஸ்ட் மாதத்தில் உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் தேவையான சிபார்சுகளைப் பெறுவதற்கு முடியாமல் உரிய உத்தியோகத்தர் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் 2011 செப்தெம்பர் வரை தாமதமாகியிருந்தது.

(ஈ) பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குரிய பெஸ்டியன் மாவத்தை பிரயாணிகள் போக்குரவத்து பகுதியின் முகாமைத்துவத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட காரணத்தினால் 2011 ஆம் ஆண்டின் நுழைவு அனுமதிப்பத்திர வருமானமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 7,067,359 தொகையான போதிலும் அதில் சேவையாற்றிய பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் ஊழியர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 12,594,476 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(உ) இலங்கை ஆசிரியர் சேவையின் I ஆம் வகுப்பு ஆசிரியர் தனது பதவி மற்றும் சேவைக்காலம் தொடர்பாக போலியான தகவல்களைக் குறிப்பிட்டு பேராதெனிய தேசிய கல்வியியல் கல்லூரியின் தொழில்தேர்ச்சி அபிவிருத்தி பாடநெறிக்காக விண்ணப்பித்திருக்கும் போது 2008 செப்தெம்பர் 09 தொடக்கம் உதவி கல்விப் பணிப்பாளர்

(பௌத்த சமயம்) மற்றும் 2010 நவம்பர் 24 தொடக்கம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்ப) பதவிகளில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஊ) “சுபசன் நிம்தற” என்ற பெயருடைய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் இயந்திரங்களை தயாரிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,167,540 தொகையும், வேலையற்ற பட்டதாரிகளின் இயலுமையை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,466,527 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் வளப் பங்களிப்பாளராக செயற்பட்டவருக்கு நாளொன்றுக்கு ரூபா 75,000 படி 03 தினங்களுக்காக ரூபா 225,000 தொகையும், 08 தினங்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 600,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல், வினைத்திறன் மற்றும் செயற்திறனான அரசாங்க சேவைக்காக வேலையில்லாப் பட்டதாரிகளின் அறிவுத்திறன் மற்றும் தொழிற் தகைமைகளை முன்னேற்றுதல் போன்ற இந்த நிகழ்ச்த்திட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும் அதற்காக முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டமைக்கான விடயங்கள் அவதானிக்கப்படவில்லை.

(iii) இந்த நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளுக்காக தொண்டராகச் செயற்பட்ட உத்தியோகத்தருக்குப் பதிலாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 10,000 படி 2011 திசெம்பர் வரை ரூபா 160,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 செயலாற்றல்

---

### 2.11.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கிடைத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | மூலம் | கிடைத்த நிதிஏற்பாடு | செலவினம் | பயன்பாடு குறைவு/ (மிகை) |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வகைப்படுத்தப்பட்ட மானியம் | 660,000,000 | 688,305,872 | (28,305,872) |
| (ii) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் | 1,231,250,000 | 1,220,118,003 | 11,131,997 |
| (iii) | ஒன்றிணைந்த மானியம் | 103,500,000 | 93,622,968 | 9,877,032 |
| (iv) | ஏனைய மானியம் உலக வங்கி நன்கொடை- கல்வி | 94,312,000 | 81,523,487 | 12,788,513 |

**2.11.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் ரூபா 3,239.45 மில்லியன் பெறுமதியான 6988 வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றன.

| | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 5984 | 699 | 6683 |
| 50% இனை விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 83 | 23 | 106 |

| | | | |
|---|---|---|---|
| 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 106 | 04 | 110 |
| ஆரம்பிக்கப்படாதவை | 85 | 02 | 87 |
| சர்ச்சைக்குரிய/ பிரச்சினைகளுக்குரிய நிலையிலுள்ளவை | 02 | - | 02 |
| மொத்தம் | 6260 | 728 | 6988 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (குறைநிரப்பு மதிப்பீடு 11) புலத்சிங்ஹல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் உடுகலகந்த விஷேட செயற்திட்டத்திற்காக உள்ளூராட்சி திணைக்களத்தில் 10 செயற்திட்டங்களின் கீழ் ரூபா 16,648,539 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 09 செயற்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான வேலையில் இருந்தது. இதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட ரூபா 14,445,699 தொகையான 3 வீதி மீளமைப்புச் செயற்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட கொங்கிரீட், ஏற்றுக்கொள்ளப்பட்ட கலவையின் சக்தியைக் கொண்டிருக்காமை மற்றும் கொங்கிரீட் தட்டுக்கள் எதிர்பார்க்கப்பட்ட தடிப்பத்தில் இல்லாதிருந்தமை என்பன இரசாயனப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2011 யூலை மாதத்தின் போது மேல் மாகாண வீதி அபிவிருத்தி மிருக உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், கடற்றொழில் மற்றும் சுற்றுலா அமைச்சிற்கு தற்காலிகமாகக் கையளிக்கப்பட்டிருந்த இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமான சேற்றுத்தடாகம், நீர்தாங்கி மற்றும் உயிரினப் பெருக்கத்திற்காக பழுதுபார்த்து புதிதாக நிர்மணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 9,512,887 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பரிசோதனைக் கூடம் உயிரின உற்பத்திச்

செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் காட்சிக்கூடமாகப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த நிதி அறிக்கையின் மூலம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு செலவினங்களைச் செய்யவேண்டிய மூலதனத் தன்மையிலான செலவினங்களுக்காக மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் வகைப்படுத்தப்பட்ட மானியம் மற்றும் மாகாண குறித்த அபிவிருத்தி மானிய செயற்திட்ட இலக்கத்தின் கீழ் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு செலவினங்கள் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் கருத்தில் கொள்ளக்கூடிய அளவில் அவதானிக்கப்பட்டன.

## 2.11.3 நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நியம மட்டத்துடன் ஒப்பிட்டபோது குறைபாடான நியம மட்டத்தில் காணப்பட்ட நிலையமொன்றின் நியமத்தை உயர்த்துவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 300,000 தொகை அந்த நிலையத்தின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்படாமல் 2011 ஆம் ஆண்டில் உயர்ந்த நியம மட்டத்தில் உள்ள 09 நிலையங்களுக்கு பரிசுகளைப் பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அத்தொகையில் ஒரு பகுதி நிலையத்திலுள்ள ஊழியர்களுக்கு பரிசுப் பணமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறார்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனமொன்றிலிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் கிடைத்த ரூபா 60,000 தொகையானது திணைக்கள ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படடிருந்தன.

## 2.12 உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல் மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்காக முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிராததுடன் உள்ளூராட்சி மன்றங்களின் கணக்குகளின் கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் நலனாளிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும் உள்ளூராட்சி மன்றங்களின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீளாய்வாண்டை உள்ளடக்கிய அண்மைய 04 ஆண்டுகளின் தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | கணக்காய்வு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் (நிதிக்கூற்றுக்கள்) எண்ணிக்கை | கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியானதாக (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை |
|---|---|---|
| 2007 | 48 | 22 |
| 2008 | 48 | 22 |
| 2009 | 48 | 22 |
| 2010 | 48 | 13 |
| 2011 | 48 | 20 |

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 48 உள்ளூராட்சி மன்றங்களின் நிலுவை வருமானம் ரூபா 6,546,067,697 ஆக இருந்தது.

(இ) 12 உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள்/ ஏனையவர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 29,737,305 ஆக இருந்தது.

(ஈ) உள்ளூராட்சி மன்றங்களில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள / பேணப்பட்டிருக்கவில்லை.

**2.13 உள்ளகக் கணக்காய்வு**

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 கூட்டிணைந்த திட்டம்**

2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடர்ந்துவரும் வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.15 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.16 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டிற்காக மாகாண சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஒரு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தித் திட்டம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வை
(ஊ) பதவியணியினர்